அமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது, அதைத் தவிர்ப்பதற்காக வட்டச் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகயிருப்பின், நிதிநிலைக்கு ஏற்ப அங்கே புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**35—**

## நியாய விலைக் கடை

***8549—திரு. செ. பெருமாள்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியம், குண்டூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மலைப் பிரதேசத்தில் பகுதிநேர அங்காடிக்குக் குடும்ப அட்டைகளைப் பிரித்தவுடன் தாய்க் கடையில் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால் சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்றத் தொகுதி, ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு லேம்ப் கூட்டுறவுச் சங்கத் தாய்க் கடையிலுள்ள 259 குடும்ப அட்டைகளில் 112 குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய பகுதிநேரக் கடை அமைத்தால், தாய்க் கடைக்கு 147

குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தி ஆகாததால், குண்டூர் கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி திறக்கப்பட சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

**திரு. செ. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியம், குண்டூர் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் ஏற்காடு நியாய விலைக் கடைக்கு 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, நியாய விலைக் கடையிலே அரிசி மற்றும் பொருட்களை வாங்க வேண்டிய சூழல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல மலைக் கிராமமாக இருக்கின்ற சூழ்நிலையில் அங்கு இருக்கும் மக்கள் தோட்ட வேலைக்குச் செல்கிறார்கள். அவர்களுக்காக அரசினுடைய விதியினைத் தளர்த்தி, ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, பகுதிநேர அங்காடி திறப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தியாகாத மலைப் பிரதேசங்களில், பகுதிநேரக் கடைகள் திறக்க முடியாத நிலையில், தாட்கோ நிதியுதவி பெற்று, நடமாடும் அங்காடிகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் சென்று விநியோகம் செய்ய வேண்டுமென மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி குண்டூர் கிராமத்தில் லேம்ப்

கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் தாட்கோ நிதியுதவி பெற்று நடமாடும் அங்காடி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.*

**திரு. செ. பெருமாள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு, பணிந்து அந்தப் பகுதியினுடைய மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி கானங்குப்பம், மணலூர் ரோட்டுக்காலனி, சிவனந்திபுரம், கோவில்குப்பம் போன்ற பகுதிகளில் 150 கார்டுகள் இருக்கின்ற கிராமத்திற்கு பகுதிநேரக் கடை வேண்டி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கடைகளைத் திறப்பதற்கு எந்தவிதமான சாத்தியமும் இதுவரை தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதிகளுக்குப் பகுதிநேரக் கடைகள் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கருத்துரு பெற்று, அவசியமெனில் நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியில் பகுதிநேர அங்காடியினைத் திறந்து வைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 பிப்ரவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன் அவர்கள்.

**திரு. க. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக உருவாக்க அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பாதங்களை வணங்குகிறேன். திருப்போரூர் தொகுதியில், திருப்போரூர் தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிவித்து, தனது திருக்கரங்களால் திறந்து வைத்த அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியில் அடங்கிய பனங்காட்டுப்பாக்கம், பொங்கேரி, மேலேரிப்பாக்கம், நெம்மேலி, தர்பாபுரம், புதுப்பாக்கம், ஜம்பேரி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகளுக்குச் செல்ல வேண்டுமானால் 4 கிலோ மீட்டர் அல்லது 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. மழைக்காலங்களில் அங்கு சென்று பொருட்களை வாங்கிவருவது சிரமமாக உள்ளதால், இப்பகுதிகளுக்கு பகுதிநேரக் கடைகளை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனவும், அக்கடைகளை அமைத்துத் தர விதிமுறைப்படி வழி இல்லையென்றாலும், விதிமுறைகளைத் தளர்த்தி இப்பகுதிகளுக்குக் கடைகளை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கும்போதே விதிமுறைகளின்படி வழி இல்லையென்று சொன்னாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைகளைப் புதிதாக அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்று கேட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கருத்துரு பெற்று, அவசியமெனில் சிறப்புக் கூற்றின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கடைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய ஆட்சியில் திறந்து வைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**36—**

**கண்காணிப்பு மையம்**

***8560—திரு. சி.எச். சேகர்:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதியில் சுற்றுச்சூழல் கண்காணிப்புக் கட்டுப்பாட்டுக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் புகைப்போக்கி வழியாக வெளியேற்றப்படும் புகையின் தரத்தை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் காற்று மாசு கண்காணிப்பு மையம் (CARE AIR CENTRE) மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், கூடுதல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு குழுமம் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*